# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் நடவடிக்கைகள்
807, அண்ணா சாலை, சென்னை-600 002
**முன்னிலை:** டாக்டர் (திருமதி) பீலா ராஜேஷ், இஆப,

<u>ந.க.எண்.16554 / 2018 / பிஏ2</u> <u>நாள்: 02.11.2018.</u>

பொருள்: கட்டிடம் - நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், தண்டலம் கிராமம், சர்வே எண்கள்.79/3Apt, 4A1-ல் 4076.77சமீ பரப்பு கொண்ட மனையிடத்தில் மனையிட ஒப்புதலும் அம்மனையில் அமையும் உத்தேச Stilt + 4 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டுமானத்திற்கு கட்டிட / திட்ட அனுமதி வழங்க இசைவளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் M/s.Arun Excello Construction LLP அவர்கள் கடிதம் நாள்.25.05.2018 மற்றும் 07.09.2018.
2. உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் கடிதம் ந.க.எண்.2008/2018/மாஉதிகு, நாள்.23.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:28.03.2012.
4. அரசாணை எண்.85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:16.05.2017.
5. அரசாணை எண்.135, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:21.07.2017.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.7486/2009/பிஏ2, நாள்:16.04.2009.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.21075/2009/பிஏ1, நாள்.04.04.2012.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.12201/2017/சிபி, நாள்:28.09.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதம் ந.க. எண்.14227/2017/சிபி, நாள்.14.12.2017.

---

<u>உத்திரவு:</u>

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், தண்டலம் கிராமம், சர்வே எண்கள்.79/3Apt, 4A1-ல் 4076.77சமீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு 1 முதல் 11 வரை என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச Stilt + 4 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டுமானத்தின் பரப்பு விபரம் கீழ்கண்டவாறு அமைகிறது.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

**AREA STATEMENT (IN SQ.M)**

| Block | Stilt Floor Non-FSI Area (Parking Area) | Typical Floor ($1^{st}$ to $4^{th}$) (in Sq.m) | No. of Floor | Total Typical X No. of Floor (in Sq.m) | Total FSI Area (in sq.m) | No. of Dwelling Units | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Typical Floor | |
| 1 | 1935.87 | 1803.84 | 4 | 7215.36 | 7215.36 | 34 X 4 | 136 |
| Total FSI Area Achieved | | | | | 7215.36 | Total | 136 |

| | | |
|---|---|---|
| Plot Area | - | 4076.77 sq.m |
| Total FSI Area | - | 7215.36 sq.m |
| FSI Achieved | - | 1.77 |
| OSR Provided | - | 412.872 sq.m |

மேற்கண்ட உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி / திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.269 / 2018 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண். A முதல் D வரையிலான 412.87சமீ பரப்புள்ள (OSR) பொது உபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும் சம்பந்தபட்ட அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.
2. சாலைக்கான இடம் பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தின் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
3. சாலைக்கான இடம் பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
5. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

6. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."
7. மத்திய மற்றும் மாநில அரசு துறையினிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
8. The provisions in the G.O.(Ms) No.17, Housing and urban Development (UD4(3)) Department dated: 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.
9. பார்வை 9-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority"

<u>நிபந்தனைகள்:</u>

1. உத்தேச குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்டவரைபடத்தில் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
13. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 6 மற்றும் 7-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் பார்வை 3 மற்றும் 4-ல் காணும் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல், நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மற்றும் பார்வை 5-ல் காண் அரசாணை மற்றும் பார்வை 9-ல் காண் கடிதத்தின்படி Shelter Fund-குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களை, மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு:
(3 X 3 = 9) வரைபடங்கள்

(ஒம்/-) பீலா ராஜேஷ்
நகர் ஊரமைப்பு ஆணையர்

பெறுநர்:
உறுப்பினர் செயலர்,
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP
Authorised Signatory

தண்டலம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.எம்.ஆனந்தன்

ந.க.எண்.07/2022/ஊ.த. நாள் 20.01.2023

பொருள் - தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - தண்டலம் ஊராட்சி - தண்டலம் கிராமம் - சர்வே எண்கள் 79/3A Part & 79/4A1-ல் 4076.77 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமையும் உத்தேச Stilt+4 தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு கட்டிட / திட்ட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1. அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019.

2. அரசாணை (நிலை) எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.06.2004.

3. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 28.03.2012, அரசாணை எண் 85 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 16.05.2017.

4. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமம், செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.2008/2018/மாஉ.திகு(செ.மா5), நாள் 08.06.2022.

5. தண்டலம் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.63 நாள் 06.12.2022. பலவகை ரசீது எண்.7898 நாள் 20.01.2023

********

உத்தரவு -

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்கள் 79/3A Part & 79/4A1-ல் 4076.77 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமையும் உத்தேச Stilt+4 தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு பார்வை 1ல் காணும் இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம், அவர்களின் நடவடிக்கைகளின்படி, திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் பரப்பளவு விவரம் பின்வருமாறு.

## AREA STATEMENT

| Description | Stilt Floor Non-FSI area (Parking area) | Typical Floor (1st to 4th) (in Sq m) | No. of Floor | Total Typical X no. of Floor (in Sq.m) | Total FSI area (in sq.m) | No of Dwelling Units | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Typical Floor | |
| Blocks 1 | 1935.87 | 1803.84 | 4 | 7215.36 | 7215.36 | 34x4 | 136 |
| | Total FSI area Archieved | | | | 7215.36 | Total | 136 |

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

**Plot Area – 4076.77 Sq.m**

**Total FSI Area – 7215.36 Sq.m**

**FSI Achieved – 1.77**

**OSR provided – 412.872 Sq.m**

மேற்படி தொகுப்பு குடியிருப்பு கட்டுமானம் அமையும் மனையிடத்திற்கு 1 முதல் 11 வரை என எல்லையிட்டு மனை ஒப்புதல் மற்றும் க.வ./ந.ஊ.இ.எண்.269/2018 என எண்ணிட்டு தொழில்நுட்ப இசைவு அனுமதியும், நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளிட்டு க.வ/மாஉ.திகு(செ.மா)எண்.29 (1முதல் 3 வரை)/2022 (3 தாள்கள்) என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50-ன்படி திட்ட அனுமதி வழங்கப்பட்ட தினத்திலிருந்து **08.06.2022** முதல் **07.06.2030** வரை எட்டு ஆண்டுகளுக்கு மட்டும் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 2ல் காணும் விவரப்படி அனுமதி கட்டணம் ரூ.5,48,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) வங்கிவரைவாக தண்டலம் ஊராட்சி மன்றத்தில் செலுத்தப்பட்டு அதன் நகல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிட தொழிலாளர் நலநிதி, ரூ.6,21,300/- யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில் சம்மந்தப்பட்ட கணக்கு எண்ணில் RTGS மூலமாக செலுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு **20.01.2023** முதல் **19.01.2031** வரை எட்டு ஆண்டுகளுக்கு கட்டிட / திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. பார்வை 1-ல் காணும் .இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமம், செங்கல்பட்டு அவர்களின் உத்தரவில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்ற வேண்டும்.
2. Tamilnadu Town & Country Planning Act. 1971 as mentioned specification about front set back / Rear, Side set back rules must to be follows.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. அனுமதிக்கு வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory

7. கட்டிடம் கட்ட உத்தரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்தரவினை ரத்து செய்ய ஊராட்சி மன்றத்தலைவருக்கு உரிமை உண்டு.

8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.

9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படாமலிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்தும், தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலாளர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

14. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

15. தணிக்கை காலத்தில் தொகை ஏதேனும் குறைவாக கட்டியிருப்பின் அத் தொகையினை தங்கள் நிறுவனமே செலுத்தப்படவேண்டும்.

20/01/23
தலைவர்
தண்டலம் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

**Arun Excello Constructions LLP**
**No.18, Bhattad Tower,**
**West Cott Road,**
**Royapettah,**
**Chennai 600 014.**

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorised Signatory



## our services doesn’t just end there

### Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate